முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,
2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25 ம் நாள் சனிக்கிழமை
I.A.No.09/2025 in I.A.No.06/2024 in O.S.No.69/2024

1. பாக்கியம்
2. அன்பரசி
3. சிலம்பரசி
4. பழனிச்சாமி ... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிராக//

1. மாணிக்கம்
2. மகாமுனி
3. சார்பதிவாளர் அவர்கள், குளித்தலை
4. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கரூர்

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 17.10.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மருதமுத்து அவர்கள் முன்னிலையாகியும், 3 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

உத்தரவு

வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்

1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. இவ்வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் 30.08.2024 அன்று 1 ம் பிரதிவாதி தனது வாரிசுகளை விட்டுவிட்டு இறந்து விட்டார். மேற்படி நபரை வாரிசுகளாக சேர்க்க மனு தாக்கல் செய்துள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன 1 ம் பிரதிவாதியின் தாயார் உயிருடன் இருப்பதாக கூறிய நிலையில் இறந்த நபரின் தாயாரை இ.ம.எண்.06/2024 மனுவில் சேர்க்க வேண்டியது

அவசியம் ஆகிறது. எனவே இ.ம.எண்.06/2024 ல் மனுவில் கண்ட நபரை சேர்த்து திருத்தப்பாடு செய்ய அனுமதி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்

2) 2 ம் பிரதிவாதி இவ்வழக்கை நிராகரிப்பு செய்யக்கோரி கட்டளை 7 விதி 11 ன் கீழ் மனு தாக்கல் செய்திருந்தார். மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னிட்டு தான் இ.ம.எண்.06/2024 ல் கண்ட தவறை திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் கண்ட உத்தேச தரப்பினரான பொன்னம்மாள் என்பவர் இவ்வழக்கு தாக்கல் செய்த போது உயிருடன் இருந்தார் என்பது மனுதாரர்களுக்கு நன்கு தெரியும். வேண்டுமென்றே அவரை சேர்க்காமல் எவ்வித காரணமும் இல்லாமல் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. இம்மனுவை அனுமதித்தால் வழக்கின் தன்மை மாறிவிடும். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

தீர்வு

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன 2 ம் எதிர்மனுதாரரின் தாயார் உயிருடன் இருப்பதாகவும் அவரை இ.ம.எண்.06/2024 மனுவில் சேர்க்க வேண்டுமென வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபனை செய்யப்பட்டது. இ.ம.எண்.06/2024 மனுவானது 2 ம் எதிர்மனுதாரர் வாரிசுகளை சேர்க்க தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி மனுவின் வாரிசு விபரங்களில் இறந்தவரின் தாயார் பொன்னம்மாள் என்பவர் சேர்க்கப்படாமல் போய்விட்டது. தற்போது அவரை சேர்க்க இம்மனு தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கதாகவே உள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்

–இல்லை–

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்

–இல்லை–

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை.

****

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
குளித்தலை

I.A.No. 09/2025
in
I.A.No. 06/2024
in
O.S.No. 69/2024

DRAFT / FAIR ORDER

D.D.25.10.2025

****